<u>செய்தி குறிப்பு</u>

<u>ஒருங்கிணைந்த/ முழுமையான ஆன்லைன் கட்டட அனுமதி திட்டத்தை செயல்படுத்த, புதுச்சேரி அரசாங்கம், இ-கௌ அறக்கட்டளையுடன் இணைந்து கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்.</u>

புதுச்சேரி மாநிலத்தில் செயல்படும் நகர அமைப்பு குழுமங்களில் <u>ஒருங்கிணைந்த/ முழுமையான</u> ஆன்லைன் மூலம் கட்டட அனுமதி வழங்கும் லட்சிய செயல்திட்டத்தை நிறைவேற்ற, புதுச்சேரி அரசின், நகர மற்றும் கிராம அமைப்பு துறை, இ-கௌ அறக்கட்டளையுடன் இணைந்து செப்டம்பர் 3ஆம் தேதி 2020 அன்று, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. தலைமை நகர அமைப்பாளர், நகர மற்றும் கிராம அமைப்பு துறை மற்றும் இ-கௌ அறக்கட்டளை, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கையெழுத்திட்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், 18.09.2020 அன்று, புதுச்சேரி அரசின் நகர மற்றும் கிராம அமைப்பு துறை மற்றும் பெங்களூரூவை சேர்ந்த இ-கௌ அறக்கட்டளை இடையே, மாண்புமிகு நகர மற்றும் கிராம அமைப்பு துறை அமைச்சர் திரு.அ.நமச்சிவாயம் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது. அச்சமயம், திரு.கே.மஹேஷ், ஐ.ஏ.எஸ்., அரசு செயலர் (நகர திட்டமிடல்), திரு.வி.சத்தியமூர்த்தி, தலைமை நகர அமைப்பாளர், திரு.எஸ். ஸ்ரீதரன், முதுநிலை நகர அமைப்பாளர், புதுச்சேரி நகர அமைப்பு குழும உறுப்பினர் செயலர் திரு.M.கந்தர்செல்வன், திரு.S.ராஜசேகர், ASIO, NIC மற்றும் பி.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர் இ-கௌ அறக்கட்டளை ஆகியோர் உடன் இருந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், கட்டிட வரைபடங்களை ஆய்வு செய்வதற்கான <u>ஒருங்கிணைந்த/ முழுமையான</u> தானியங்கி ஆய்வு மென்பொருளான eDCR'ஐ, இ-கௌ அறக்கட்டளை, இலவசமாக செய்து கொடுக்கும். கட்டிட வரைபட அனுமதி மற்றும் மனைப்பிரிவு அனுமதியை மக்களுக்கு விரைவாகவும் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கும் பொருட்டு, NIC உதவியுடன் நகர மற்றும் கிராம அமைப்பு துறை டிசம்பர் 2019-ல், ஆன்லைன் கட்டட அனுமதியை வலைத்தளத்தில் (https://obps.py.gov.in) அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் பொது மக்கள் தங்களின் வரைபட அனுமதி விண்ணப்பங்களை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். மேலும் விண்ணப்பத்தின் நிலையை மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஆன்லைன் வசதி, தானியங்கி ஆய்வு மென்பொருள் இன்றி புதுச்சேரி, காரைக்கால், மாஹே, யானம் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய அரசின், வீட்டு வசதி மற்றும் நகர விவகாரங்கள் அமைச்சககம் <u>ஒருங்கிணைந்த/ முழுமையான</u> ஆன்லைன் கட்டட அனுமதி திட்டத்தை கொண்டு வர புதுச்சேரி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே, NIC மூலம் செயல்படுத்தப்பட்டுவந்த ஆன்லைன் கட்டட அனுமதி திட்டத்துடன், இ-கௌ அறக்கட்டளையின் 'தானியங்கி ஆய்வு மென் பொருளை' இணைத்து, ஒருங்கிணைந்த/ முழுமையான ஆன்லைன் கட்டட அனுமதி திட்டத்தை, புதுச்சேரி அரசு செயல்படுத்த உள்ளது.